**மாத்தளை மாநகர சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 யூன் 23 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 மார்ச் 10 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தளை மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 209,747 ஆன செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதிஏற்பாடுகளை மேற்கொள்ளாமையால் ஆண்டின் செலவினமும் கடன்கொடுத்தோரும் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 3,296,496 பெறுமதியான நிலுவை வருமானத்தை வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 1,519,058 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை கடை வாடகைக்காக உரிய வைப்புக் கணக்கில் ஈடுசெய்யப்பட்டிருந்த ரூபா 10,000 ஆன வாடகையை 2010 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்தமையால் நிலுவை கடை வாடகை

ரூபா 10,000 ஆல் குறைவாகவும் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கடந்த 06 ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,286,867 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணமாக, சென்ற ஆண்டில் பட்டியலிடப்பட்ட கணக்காய்வுக் கட்டணமான ரூபா 612,561 இலிருந்து அரைப்பங்கிற்கு குறைந்த தொகையான அதாவது ரூபா 300,000 மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 134,431,087 மற்றும் தனியார் கம்பனியொன்றுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,819,753 கடன்தொகைக்குரிய செலுத்த வேண்டிய வட்டி கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட 22710986 மற்றும் 72710984 ஆம் இலக்கங்களுடைய கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கியில் வைப்புச் செய்யப்படாத முறையே ரூபா 165,813 மற்றும் 14,913 தொகையான மீதி காணப்பட்ட போதும் அவற்றை ஐந்தொகையின் குறிப்புக்களில் உத்தியோகத்தர்களிடமுள்ள காசாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 8,572 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமையால் நூலகப் புத்தகக் கணக்கினதும் மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புக் கணக்கின் மீதியும் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2009 ஆம் ஆண்டின் போது ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 98,750 பெறுமதியான 49-9306 ஆம் இலக்க நீர் பவுசரின் பெறுமதி மற்றும் தவனையாக அறவிடும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 4,204,895 பெறுமதியான டப்பீஜீஎல் 9357 ஆம் இலக்க கலி பவுசரின் பெறுமதி என்பவற்றை மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டிகள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சபையிடமுள்ள ரூபா 5,000,000 பெறுமதியான எஸ்கவேட்டர் இயந்திரத்தினை மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டிகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மாதாந்த குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த புகையிரத பொருட் களஞ்சியத்திற்காக 2010 திசெம்பர் 31 இல் புகையிரதத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,883,700 தொகையான வாடகையை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த வீதியைப் பதப்படுத்தும் இயந்திரத்தின் கட்டணம், சவ ஊர்திக் கட்டணம், மண்டபத்தை வாடகைக்கு கொடுத்தமைக்கான கட்டணம் ரூபா 202,242 தொகையை வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

(ஃ) மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது கொம்போஸ்ட் பசளை கொள்கலன்களை விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 609,200 தொகையான வருமானமொன்றை அந்தந்த ஆண்டுகளில் வருமானத்திற்கு எடுக்காமல் ஐந்தொகையில் திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) சபைக்குச் சொந்தமான பிணியாளர் வண்டியை தவனை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதில் கிடைத்த ரூபா 1,384,876 தொகையினை வருமானத்திற்கு எடுக்காமல் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

5 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 175,159,228 ஆக இருந்ததுடன், பயன்படு ஏடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 164,815,545 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 28,747,937 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 36 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 103,177,903 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 121,380,235 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### (இ) பதிவேடுகளை பராமரிக்காமை

கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கடன்பட்டோர் பதிவேடு

(ii) நிலையான சொத்துப் பதிவேடு

(iii) நட்டங்கள் பதிவேடு

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) <u>மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்)</u>** | |
| (i) 186 ஆம் பிரிவு | ஏதாவது வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கு உரிய வங்கி தொடர்பாக வர்த்தமானி அறிக்கையில் பிரசுரிக்கப்படும் கட்டளைகள் மூலம் அமைச்சரினால், நிச்சயிக்கப்பட்டு காட்டப்பட வேண்டுமாயினும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல், நான்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (ii) 216 ஆம் பிரிவு | எந்தவொரு தலைப்பிலாயினும் செலவினக் குறைப்பு அதிகரிப்பு மற்றும் மாற்றல்கள் என்பவற்றிற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை, அச்செலவினத்தை மேற்கொள்ள முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 49 செலவினத் தலைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளை விஞ்சி ரூபா 1,715,257 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டினை விஞ்சி 2 சந்தர்ப்பங்களில் ரூபா 35,494 ஆன செலவினம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 371(இ) | வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதி உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2008 பெப்ரவரி 07 முதல் 2009 திசெம்பர் 29 வரை 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட |

ரூபா 144,280 ஆன முற்பணத்தை கணக்காய்வு தினமான 2010 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்ததுடன், 2010 ஆண்டில் 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 96,627 ஆன முற்பணங்களை தீர்வு செய்யும் போது 19 நாட்கள் முதல் 172 நாட்கள் வரையான தாமதம் அவதானிக்கப்பட்டது.

(ii) நி.பி 571

காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 4,880,683 ஆன வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி 1646

2009 ஆம் ஆண்டில் 28 வாகனங்களினதும் மற்றும் 2010 யூலை 31 வரையில் 31 வாகனங்களினதும் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பவற்றை 2010 செப்தம்பர் 15 ஆம் திகதி வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின தாபன விதிக்கோவை

----------------------------------------

xxiv ஆம் அத்தியாயத்தின் 10:4 ஆம் பிரிவு

மீளாய்வாண்டின் போது மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 435,000 தொகையான இடர்கடன் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது குறித்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருந்த பிணையாளர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 880 மற்றும் மத்திய மாகாண பிரதான செயலாளரின் 2003 ஏப்ரல் 11 ஆம் திகதிய

பிணை வைக்க வேண்டிய யாதேனும் உத்தியோகத்தர்களினால் வங்கிக் கணக்கொன்று மூலமோ அல்லது காப்புறுதி

| | |
|---|---|
| சீபீசி/சீஎஸ்/06/06/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | உறுதி மூலமோ பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) <u>அரச நிதிச் சுற்றறிக்கை</u> | |
| 2009 செப்தம்பர் 18 ஆம் திகதிய பீஎப்437 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரச துறைக்குரிய வாகனங்களின் காப்புறுதி மேவுகை நேரடியாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடமிருந்து அல்லது வ/ப இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அதற்காக கொடுப்பனவு செய்யும் போது முகவர் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளக்கூடாத போதும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 50 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது தனியார் காப்புறுதி கம்பனிகளிலிருந்து காப்புறுதி செய்யப்பட்டு அதற்காக காப்புறுதி முகவர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான எந்த ஒரு வாகனம் தொடர்பாகவும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களில் அரசாங்க இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்கு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 235,911 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,493,973 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 கிடைக்க வேண்டிய வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகரபிதாவினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 16,225 | 16,861 | (636) | 17,500 | 16,401 | 1,099 |
| (ii) | வாடகை | 12,898 | 10,885 | 2,012 | 15,510 | 13,021 | 2,489 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,860 | 3,794 | 66 | 3,870 | 4,075 | (205) |
| (iv) | ஏனையவருமானம் | 43,647 | 40,645 | 3,602 | 46,448 | 43,006 | 3,442 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 2,367,426 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 7,533,193 முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 2.2.4 நீர்க்கட்டணம்

சபைக்குச் சொந்தமான நீர் விநியோக முறைமையை 2004 ஆம் ஆண்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட போது, காணப்பட்ட ரூபா 4,802,812 மீதியை உரிய நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 111,359 | 112,022 | (663) | 107,503 | 111,400 | (3,897) |
| ஏனையவை | 45,295 | 61,005 | (15,710) | 55,696 | 57,619 | (1,923) |
| உப மொத்தம் | 156,654 | 173,027 | (16,373) | 163,199 | 169,019 | (5,820) |
| மூலதனச் செலவினம் | 7,620 | 7,162 | 458 | 19,595 | 4,241 | 15,354 |
| மொத்தம் | 164,274 | 180,189 | (15,915) | 182,794 | 173,260 | 9,534 |

## 2.4 மிகை அறவீடுகள்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரத்தின்) கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 50,857 ஆக இருந்தது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்றுனர்கள் | - | - |
| மூன்றாம் நிலை | 10 | 09 |
| இடை நிலையினர் | 97 | 93 |
| ஆரம்ப மட்டத்தினர் | 296 | 294 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 81 |

(ஆ) முறையான அங்கீகாரமின்றி 81 அமைய /தற்காலிக ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) சபைக்கு எவ்வித சேவைகளையும் பெற்றுக்கொள்ளாமல் 2010 யூன் மாதம் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரித்தாக தொழிலாளர்களுக்கு ரூபா 135,180 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

ரூபா 553,750 பெறுமதியான பௌதீக வளங்கள் செயற்பாடற்றும் குறைப்பயன்பாட்டுக்குட்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 33,549,586 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,981,516 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,181,032 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 856,422 ஆக இருந்தது. 1995 திசெம்பர் 27 ஆம் திகதிய 95/9 ஆம் மத்திய மாகாண கணக்குச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இளைப்பாறும் போதும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் போதும் கடன் மீதி தீர்த்து வைக்கப்படும் வரை அதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் 131 பேரிடமிருந்து ரூபா 829,791 கடன்மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 2.6.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,488,449 ஆக இருந்தது.

## 2.6.5 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக ரீதியான பரிசோதனைகள் / கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 82,386,147 ஆக இருந்தது.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

301-3445 மற்றும் கேஎச் - 4277 ஆம் இலக்க வாகனங்களுக்கு முறையே 2008 ஒக்தோபர் 30 ஆம் திகதி மற்றும் 2009 மார்ச் 30 ஆம் திகதிகளில் ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக பொலிஸ் முறைபாடு மற்றும் பொலிஸ் அறிக்கைகள் இல்லாதிருந்ததுடன், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் நட்டத்திற்கு பொறுப்பானவர்களை உறுதிப்படுத்துவதற்காக 2010 ஆகஸ்ட் மாதம் வரையில் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 4000 பிரசை சேவைகள் நியதிச்சட்ட புத்தகங்களின் பிரதிகளை அச்சிடுவதற்காக அபிவிருத்தி கணக்கிலிருந்து 2009 திசெம்பர் 18 ஆம் திகதி ரூபா 129,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு தினமான 2010 செப்தம்பர் 17 ஆம் திகதி வரை அச்சிடப்பட்டு 09 மாதங்கள் கடந்திருந்த போதும் அச்சிடப்பட்ட 4000 பிரதிகளில் 3205 பிரதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், பகிர்ந்தளிக்கப்பட்ட 795 பிரதிகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட முறையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பிரதிகளை அச்சிடுவதற்காக ஆசிய மன்றத்தினால் ரூபா 261,600 வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் செலவிடப்படாத ரூபா 132,100 தொகை 2010 திசெம்பர் 31 வரையில் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நாளாந்த சந்தையை நடாத்துவதற்காக மாதாந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த புகையிரத பொருட் களஞ்சியத்திற்காக 2007 நவம்பர் மாதத்திலிருந்து 2010 திசெம்பர் 31 வரையில் செலுத்த வேண்டிய வாடகை ரூபா 1,883,700 ஆக இருந்ததுடன், அக்காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வருமானம் ரூபா 467,651 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அக்காலப்பகுதியில் அதன்மூலம் சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1,416,049 ஆக இருந்தது.

## 2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 188 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபை நிதியத்தினை பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகளான விசிடிங் அட்டைகள் மற்றும் புதுவருட வாழ்த்து அட்டைகள் என்பவற்றை அச்சீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 35,325 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (V) ஆம் பகுதியின் 4(அ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 50,000 இற்கு கூடுதலான கொள்வனவுகளின் போது செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தி திறந்த கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 247,311 பெறுமதியான பாடசாலை உபகரணங்களையும் புத்தகங்களையும் கொள்வனவு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்கொள்வனவின் போது பதிவு செய்யப்பட்ட மூன்று வழங்குனர்களிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ளப்பட்ட விலை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய 11/309 ஈ 83/v ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மொழி பெயர்ப்பிற்காக கொடுப்பனவை மேற்கொள்ளும் போது சொற்கள் எண்ணிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மாநகர ஆணையாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மாதாந்த நிலையான கட்டணத்தின் அடிப்படையில் சபையின் அறிக்கை தமிழில் மொழி பெயர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 135,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 1984 நவெம்பர் 20 ஆம் திகதிய 1984/19 ஆம் இலக்க (ஐ) சுற்றறிக்கையின் 4:2 மற்றும் 6:1 பந்தியின் பிரகாரம் இலக்கிடப்பட்ட மொத்த வீதவரி வருமானத்திலிருந்து 75% ஐ விஞ்சி சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து 3% ஐ வருமானத்தை சேகரித்த உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட முடியுமான போதிலும், அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2010 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வீதவரி வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு ரூபா 239,240 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

(அ) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வெளித்தரப்பினருக்கு 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 91,800 முற்பணத் தொகை 2010 திசெம்பர் 31 வரையில் தீர்க்கப்படாதிருந்ததுடன், முற்பணத்தை வழங்குவதற்காக பொருத்தமான பாதுகாப்பொன்றோ பெற்றுக்கொள்ளப்படாத காரணத்தால் அத்தொகையை மீளப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. 1994 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட முற்பணங்களில் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,660,909 தொகை தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) சபையின் உத்தியோக வங்கிக் கணக்கிலிருந்து மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக்கொண்டு அதற்காக வட்டி செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக உக்குவலை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காணியொன்றை கையேற்பதற்காக 2008 ஏப்ரல் 01 ஆம் திகதி ரூபா 4,400,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. பின்னர் அக்காணிக் கையேற்பு கைவிடப்பட்டிருந்ததுடன், 02 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 2010 மே மாதத்தின் போது அப்பணம் மீளப்பெறப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் வங்கிக் கணக்கிற்காக மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,036,551 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தொழிலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட 09 ஊழியர்கள் பின்னர் சாரதிப் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அப்பதவிகளுக்கு நியமிக்கும் போது தேவையான கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த செலுத்தப்படாத ஓய்வூதியம் மற்றும் செலுத்தப்படாத சம்பளம் ரூபா 4,892,000 ஆன தொகையொன்றினை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கழிவுப் பொருள் பாத்திரங்கள் ரூபா 545,237 எதிர்ப்பெறுமதியை அறவிடக்கூடிய பயன்படு சேவைகளின் கீழ் வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சிறாப்பர் மோசடி செய்த தொகையாக ரூபா 26,549 தொகையான மீதியொன்று ஐந்தொகையில் காசு மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அபிவிருத்தி நிதியமாக ரூபா 154,181 மீதி ஐந்தொகையில் திரண்ட நிதயம் மற்றும் ஒதுக்கத்தின் கீழ் வருடக் கணக்காக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2010 ஆம் ஆண்டில் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வழங்குனர்களைப் பதிவு செய்வதற்காக ரூபா 56,700 செலவினம் மேற்கொள்ளப்பட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யாமல் ரூபா 3,132,500 செலவிடப்பட்டு 2009 ஆம் ஆண்டின் விலையை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சந்தை நடாத்திச் செல்லப்படும் புகையிரத களஞ்சியத்தின் வியாபாரிகளால் செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியலைச் செலுத்தாமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. மீண்டும் மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக நகர சபை நிதியத்திலிருந்து ரூபா 20,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 107,219 தொகையை சபை நிதியத்திலிருந்து பகுதியாக செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. சந்தை மூடப்பட்டிருந்த காலத்திற்குரிய ரூபா 43,281 ஆன மின்சாரப் பட்டியலும் இதில் உள்ளடங்கி இருந்தது.

## 2.11 களஞ்சியக் கட்டுப்பாடு

(அ) களஞ்சியம் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது ரூபா 597,825 ஆன இருப்பு மிகை மற்றும் ரூபா 60,637 இருப்புப் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிதிப்பிரமாணம் 715(1)(ஆ) பிரகாரம் களஞ்சியப் பொருட்களை முறையாக வைத்தல், அவற்றை நல்ல நிலையில் பேணுதல், வேண்டிய சந்தர்ப்பத்தில் இலகுவாகப் கண்டு பிடித்து சரி பிழை பார்க்கக் கூடிய வகையில் வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், ரோசா வீதியில் அமைந்துள்ள மாநகர சபை கட்டிட பொருட் பிரிவின் மணல், கற்கள் மற்றும் செங்கற்கள் போன்ற கட்டிடப்பொருட்கள் அதன் பிரகாரம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 762 இன் பிரகாரம் போதியளவு இருப்பினை பேணுதல் குறித்த களஞ்சியப் பொறுப்பாளரின் பொறுப்பான போதும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 செயலாற்றல்

(அ) சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த வருமான மார்க்கங்களில் பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்த வருமானம் ரூபா 72,185,643 ஆக இருந்ததுடன், சபையை நடாத்துவதற்கு ஆண்டில் ஏற்பட்ட மீண்டுவரும் செலவினம் மட்டும் ரூபா 173,027,919 ஆக இருந்தது. அதில் சபையின் ஊழியர் சம்பளத்திற்காக ரூபா 112,022,400 செலவிடப்பட்டிருந்ததுடன், சம்பளத்தைக் கொடுப்பதற்கோ சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் போதாமல் இருந்தது. மேலும் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த வருமான மார்க்கங்களினுடனான வருமானத்தை அதிகரித்துக் கொள்ள தேவையான எவ்வித உபாயங்களும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மாகாண சபையிடமிருந்து கிடைத்த ரூபா 100,606,364 ஆன வருமானக் கொடை சேர்க்கப்பட்டதன் பின்னரும் ரூபா 235,912 தொகையான வருமானத்தை விஞ்சிய செலவினமாக இருந்ததுடன், அதன் மூலம் மீண்டுவரும் செலவினத்தையோ தீர்க்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது உபகரணச் செலவினமாக ரூபா 7,162,108 செலவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் வருமானச் செலவினக் கணக்கில் பற்றாக்குறை ரூபா 6,231,529 ஆக இருந்தது. வருடாந்த பாதீட்டின்

மூலம் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 16,373,369 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் வருமானமாக ரூபா 171,831,500 தொகையை சேகரிப்பதற்கும் ரூபா 156,654,550 செலவிடுவதற்கும் பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், அவ் எல்லையில் நடவடிக்கை கொள்ளவும் நகரின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கும் சபை முயற்சி எடுக்காதிருந்ததுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உரிய திட்டங்களைத் தயாரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் 07 செலவின விடயங்களின் கீழ் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த 03 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.13 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு